# குப்பைகள் இல்லாத நகராட்சி அந்தஸ்து பெற நடவடிக்கை

## உழவர்கரை நகராட்சி ஆணையர் தகவல்

உழவர்கரை, நவ.28-

உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஸ்வச் சர்வேக்சன் என்ற தலைப்பில் நகரங்களின் தூய்மை பற்றிய கணக்கெடுப்பை நடத்தி, குப்பைகள் அற்ற நகராட்சிக்கு நட்சத்திர அந்தஸ்து அளித்து வருகிறது.

அந்த வகையில் உழவர்கரை நகராட்சிக்கு 1-ம் நட்சத்திர அந்தஸ்துக்கான அனைத்து தேவைகளையும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி பூர்த்தி செய்து *http://oulmun.in/whatsnew.php* என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் பொதுமக்களுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் 15 நாட்களுக்குள் உழவர்கரை நகராட்சிக்கு எழுத்துப் பூர்வமாக தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.